**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் - 2023**

---

சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2023 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 5792–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II(ஆ)(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பாதுகாப்பு மற்றும் சமுதாய நன்மைகளிற்காக இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களிலுள்ள சூழல் தொகுதி முகாமைத்துவத்தை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆரம்ப நில அளவை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாடு மற்றும் மனிதன் – யானை சகவாழ்வு, பாதுகாக்கப்பட்ட பிரதேச முகாமைத்துவம் மற்றும் நிறுவகரீதியான இயலளவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய பெயர்களிலான நான்கு பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,675 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படும் திகதி 2023 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த செயற்திட்ட கிரய மீள் ஒதுக்கீடு ரூபா 7,630 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியனாகும்.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் தாமதம்

| விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கிராமங்களைச் சுற்றி 47 வேலிகள் அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 31 வேலிகள் மாத்திரமே அமைக்கப்பட்டிருந்தன, 07 வேலிகள் பாதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 09 வேலிகளின் நிர்மாணப் பணிகள் 2023 மே 31 இல் முடிவடைந்த செயற்திட்டக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயன்முறையை மீண்டும் சீரமைக்க விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | யானை வேலிகள் அமைக்கும் பணியை உடனடியாக பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்பார்வை செய்ய வேண்டும். |

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனி எனேர்ஜைசர் (single energizer) மூலம் இயங்கக்கூடிய மின்சார வேலியின் மதிப்பிடப்பட்ட நீளம் 10 கிமீ ஆகும், மேலும் இந்த மதிப்பீட்டின் பிரகாரம் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்த போது நிர்மாணிக்கப்பட்ட 31 வேலிகளில் 15 வேலிகள் 5 கிமீ இற்கும் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. அதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட நீளத்தை விட குறைவான நீளத்துடன் வேலிகள் நிர்மாணிக்கப்பட்டதால், களஞ்சியத்தில் அதிக அளவு உபகரணங்கள் விடப்பட்டன. | 10 கிலோமீற்றர் நீளமுள்ள வேலிக்கு ஒரு எனேர்ஜைசர் மூலம் மின்சாரம் வழங்க முடியும். மேலும் வேலி கம்பங்கள் மற்றும் உபகரணங்கள் மதிப்பிடப்பட்டு அதற்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக் கடன்களின் பெறுகை வழிகாட்டல்களின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் நேரடி வழங்குநர்களைத் தெரிவுசெய்வதை நியாயப்படுத்துவதற்கு உலக வங்கிக்கு போதுமான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், ரூபா 794 மில்லியன் தொகையான பெறுகைக்காக நேரடி பெறுகை முறையைப் பின்பற்றுவதற்கு உலக வங்கி வழங்கிய அங்கீகாரம் கணக்காய்விற்கு | இந்த நிர்மாணத்திற்கு உள்ளூர் நிதி வழங்கப்படாது, உலக வங்கியின் உடன்படிக்கையுடன், நுவரெலியா வனவியல் நிறுவனத்தின் எஞ்சிய நிர்மாணம் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள மத்திய பொறியியல் உசாத்தணை பணியகம் மற்றும் அதனுடன் இணைந்த நிர்மாண கம்பனியான | இந்த நிர்மாணங்கள் தொடர்பாக நேரடி பெறுகை முறையைக் கடைப்பிடிப்பதற்கு உலக வங்கியின் அங்கீகாரமும், இணங்கப்பட்ட விலைகளுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய மீதமுள்ள நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு அத்தகைய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சென்ட்ரல் எஞ்சினியரிங் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்டால் மேற்கொள்ளப்பட்டது. வீடமைப்பு அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழு பரிந்துரைத்த கட்டணங்களுக்கு உட்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | குழுவின் அங்கீகாரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.3 விளைவற்ற வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் மற்றும் நெல் வயல்களை சுற்றி மின்சார வேலிகள் அமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் ஒரு பகுதி விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் சம்மந்தப்பட்ட சங்கங்களுக்கும் அனுராதபுரம் மற்றும் குருநாகல் உதவி பணிப்பாளர் அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 81 மில்லியன் பெறுமதியான எனேர்ஜைசர்கள் மற்றும் உபகரணங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 534,400 கிரயமான 16 12V (90 Am) பற்றரிகள் ரித்திகல, மொறகொட மற்றும் மஹா திபுல்வெவ ஆகிய இடங்களில் உள்ள வனவிலங்கு அலுவலக வளாகத்தில் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. | அனுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் மற்றும் வயல்களை சுற்றி மின்சார வேலிகள் அமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களில் எஞ்சியவை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிகளுக்கு பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது. | இந்த உபகரணங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும், வேலியை சரியான முறையில் அமைத்து பராமரிப்பதற்கும் வனவிலங்கு திணைக்களத்திற்கு உத்தரவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மின்சார வேலி அமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 3183 டென்ஷன் ஸ்பிரிங் (Tension Spring) அலகுகளில் 56 அலகுகள் மாத்திரமே மின்சார வேலிகளுக்காக வழங்கப்பட்டன. ரூபா 8 மில்லியன் பெறுமதியான 3127 அலகுகள் மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியத்தில் உள்ளன. மொறகொட வனவிலங்கு பீட்டா அலுவலகக் களஞ்சியத்தில் மின்சார வேலி மற்றும் மின்விளக்கு சேதமடையும் பட்சத்தில் பயன்படுத்தப்படும் ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான சைரனுடன் (siren) கூடிய வேலி மின்னழுத்த அலாரத்தின் 09 அலகுகளும் பயன்படுத்தப்படாமல் இருந்தன. | கொள்வனவு செய்யப்பட்ட டென்ஷன் ஸ்பிரிங்கின் எஞ்சிய பகுதி வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக கொடுக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு நிதியுதவி செயற்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இந்த உபகரணங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிகளுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டும். |

## 2.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| அசல் ஒப்பந்ததாரர் அளவிடை பட்டியலின் (BOQ) பிரகாரம் ரூபா 1,345 மில்லியன் ஆரம்ப மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வனவியல் நிறுவனத்தின் நிர்மாணப் பணியை பூர்த்தி செய்திருந்த போது 02 புதிய கம்பனிகளுக்கு மீதமுள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கு ரூபா 794 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அசல் ஒப்பந்ததாரர் கனிஷ்ட பதவியணியினர் விடுதியின் நிர்மாணப் பணியை நிறுத்தும் நேரத்தில், மின் நிறுவல்கள், நீர் கசிவைத் தடுப்பதற்கு குளியலறை மற்றும் கழிப்பறை சுவர்களில் வர்ணம் பூசுதல் (நீர் புகவிடாத) மற்றும் வெளிப்புற சுவர்களில் வர்ணம் பூசும் பணிகள் 60 சதவீதம் நிறைவடைந்துள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட பணிகளும் அளவிடை தாள்களில் சேர்க்கப்பட்டு புதிய கம்பனிக்கு ஒதுக்கப்பட்டதால், ரூபா 8.6 மில்லியன் மேலதிக செலவினத்தை செலவிட வேண்டியிருந்தது. | நிர்மாணப்பணிகளுக்கு இரட்டிப்பு எண்ணிக்கை ஏற்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகள் தொடர்பாக மேலதிகமாக செலுத்தப்பட்ட செலவினங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |